Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 114/2021
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 14

| | | | |
|---|---|---|---|
| Name: | சுப்ரமணியராவ் | Calling: | துணிக்கடை |
| Father's Name: | ஈஸ்வரராவ் | Religion: | |
| Village: | அம்பூர்பேட் | Age: | 70 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 16.06.2026 நேரம் : 12.52 PM

(2ம் எதிரி இறந்துவிட்டார். 1ம் எதிரி ஆஜர்.) (சாட்சி பட்டியலில் சாட்சியின் தந்தை பெயர் தவறாக இருந்ததால் இன்று நீதிமன்றத்தில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்திருக்கும் நபர் தான் இவ்வழக்கின் சாட்சி என்பதை PC722 என்பவர் மூலம் உறுதிபடுத்திக்கொண்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.)

அ.சா.14 முதன்மை விசாரணை.

வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. **பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

கடந்த 22.08.2015ம் தேதி பகல் 01.15 மணிக்கு நாராயணராவ் தாக்கப்பட்ட சம்பவம் எனக்கு தெரியும் என்றும், அந்த வழக்கு சம்மந்தமாக அன்றைய தினமே மாலை 04.45 மணிக்கு போலிசார் சம்பவ இடமான முகமது அலி பஜாரில் நாராயணராவ் கடை அருகே பார்வையிட்டு மாதிரிவரைபடம் மற்றும் பார்வைமகசர் தயார் செய்தபோது உடனிருந்து சாட்சி கையொப்பமிட்டேன். அதையே போலிசார் விசாரணையிலும் கூறி தற்போது பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சுப்ரமணியராவ்

SRIPATHI K
JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR